பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

24.08.2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம் என்ற அடிப்படையில் அரசு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- ஃபிஜி நாட்டு பிரதமர் திரு. Sitiveni Rabuka 3 நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.
- தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமைக்கப்பட்டு வரும் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து அடுத்த ஆண்டு இறுதிக்குள் ராக்கெட் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.
- உத்தராகண்ட் மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
- துரந்த் கால்பந்து போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி கோப்பையை கைப்பற்றியது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம் என்ற அடிப்படையில் கொள்கைகளை வகுத்து தமது அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதால்

இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தனியார் பத்திரிகை நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், உலக அளவில் விரைவான பொருளாதார வளர்ச்சியடைந்து வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று தெரிவித்துள்ளார்.

விரைவில் 3வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு 20 சதவீதமாக உயரும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் பெரிய அளவில் பொருளாதார நிலைத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பணவீக்கம் மிக குறைவாக இருப்பதாகவும், அந்நிய முதலீடுகள் அதிக அளவில் உள்ளதால் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவில் உள்ள லட்சக்கணக்கான முதலீட்டாளர்கள் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மியூச்சுவல் ஃபண்ட் திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் முதலீடு செய்து வருவதாக பிரதமர் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் 60 விண்வெளித் திட்டங்களை வெற்றிகரமாக இந்தியா நிறைவேற்றி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியா திட்டம், சுயசார்பு இந்தியாவை வலுவாக்கி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

ஃபிஜி நாட்டு பிரதமர் திரு. Sitiveni Rabuka 3 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளும் அவருடன் வருகின்றனர்.

முதல்முறையாக அந்நாட்டு பிரதமர் திரு. Rabuka இந்தியா வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடியை அவர் சந்தித்துப் பேசுகிறார்.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து விவாதிக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் மீண்டும் தீர்மானம் முன்மொழியப்பட்டு விரைவில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நெல்லை பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியின் 60வது ஆண்டு வைர விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான் சட்ட முன்வடிவை தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, நான்கு திருத்தங்களைச் சுட்டிக்காட்டி திருப்பி அனுப்பியுள்ளதால் சட்ட வல்லுநர்கள் மூலம் ஆலோசனை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக சித்த மருத்துவக் கல்லூரியில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட மருத்துவ ஆய்வுக் கூடம் மற்றும் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன முழு உடல் பரிசோதனை மையத்தையும், கண் அறுவை

சிகிச்சை மையத்தையும் அமைச்சர்கள் திரு. மா. சுப்பிரமணியன், திரு. கே.என். நேரு ஆகியோர் திறந்து வைத்தனர்.

<<<<>>>>

கேரள விமானப் போக்குவரத்து துறையின் இரண்டு நாள் உச்சிமாநாடு கொச்சியில் இன்று தொடங்குகிறது.

இந்த மாநாட்டை அம்மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் இன்று மாலை தொடங்கி வைக்கிறார்.

கொச்சி சர்வதேச விமான நிலையம், இந்திய வர்த்தக சபையின் கூட்டமைப்பு இணைந்து இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மாநாட்டில் 8 அமர்வுகள் நடத்தப்பட உள்ளன. இதில் குறிப்பாக ட்ரோன் பயன்பாடு, கடல் விமானப் போக்குவரத்து, ஹெலிகாப்டர் பயன்பாடு மற்றும் விமான சரக்குப் போக்குவரத்து குறித்து விவாதிக்கப்படுகிறது.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களை பதிவு செய்வதற்கான புதிய இணையதளத்தை அம்மாநில கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. Ashish Shelar தொடங்கி வைத்தார்.

இந்த இணையதளத்தின் வழியாக விநாயகர் சதுர்த்தி விழாவின் காணொலிகள் ஒளிபரப்பப்படும் என்றும், இதனால் வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்கள் வீடுகளில் இருந்தே இந்த விழாவில் கலந்துகொள்ள முடியும் என்று அமைச்சர் திரு. Ashish Shelar குறிப்பிட்டார்.

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விநாயகர் சிலைகளுக்கு மாநில அளவில் பரிசுகள் வழங்கப்படும் என்று கூறினார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் அமைக்கப்படும் ஆயிரத்து 800 விநாயகர் வழிபாட்டு கூடங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியை மாநில அரசு வழங்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமைக்கப்பட்டு வரும் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து அடுத்த ஆண்டு இறுதிக்குள் ராக்கெட் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

தேசிய விண்வெளி தினத்தையொட்டி தில்லியில் நடைபெற்ற விழாவிற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஸ்ரீஹரிகோட்டாவில் 3வது ராக்கெட்

ஏவுதளம் 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

2035ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் விண்வெளி நிலையம் அமைக்கப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரி உயர்வை அடுத்து அந்நாட்டுக்கான தபால் பார்சல் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஜெர்மனி, டென்மார்க், ஸ்வீடன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து ஃபிரான்ஸ், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளும் அமெரிக்காவுக்கான அஞ்சல் சேவையை தற்காலிகமாக நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளன.

ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவுக்குச் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது 15 சதவீத வர்த்தக வரி விதிக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கையை ஐரோப்பிய நாடுகள் எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

அமெரிக்காவில் சுற்றுலாப் பேருந்து விபத்துக்குள்ளானதில் இந்தியர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்வையிட்ட பின் 54 பயணிகளுடன் நியூயார்க் திரும்பிக்கொண்டிருந்த இந்தப் பேருந்து Buffalo நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்ததாக நியூயார்க் மாகாண காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக சமோலி மாவட்டத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

செப்டோ பஸார் பகுதியில் உயிரிழந்த பெண்ணின் உடல் மீட்கப்பட்டது.

மேலும் சிலர் காணாமல் போனதாக மாநில நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே ராஜஸ்தான் மாநிலத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

அங்குள்ள பண்டி மாவட்டத்தில் 50 சென்டி மீட்டர் அளவிற்கு மழை பெய்தது.

கோட்டா, பாரன் மற்றும் சவாய் மதாப்பூர் மாவட்டங்களில் உள்ள ஆறுகளில் வெள்ளம் அபாய அளவை தாண்டி ஓடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தலைநகர் தில்லியில் நேற்று மாலை பெய்த கனமழையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அடுத்த 2 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் இன்று குஜராத், ஹரியானா, சண்டிகர் ஆகிய மாநிலங்களிலும் கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

துரந்த் கால்பந்து போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி கோப்பையை கைப்பற்றியது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் 6-1 என்ற கோல் கணக்கில் டைமன் ஹார்பர் அணியை வென்று இரண்டாவது முறையாக ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி கோப்பையைக் கைப்பற்றியது.

<<<<>>>>

பல்கேரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhatacharjee அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 4-1 என்ற செட் கணக்கில் தைவானின் Guan Hong-ஐ வென்றார். (C/o)

<<<<>>>>

உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் ஸ்ரீநகரில் நேற்று நிறைவடைந்த கேலோ இந்தியா நீர் விளையாட்டுப் போட்டியில் மத்தியப்பிரதேசம் 10 தங்கம் உட்பட 18 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது.

ஒடிசா 10 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தையும், கேரளா 7 பதக்கங்களுடன் 3வது இடத்தையும் பிடித்தது.

நாடு முழுவதிலும் இருந்து 500 வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர்.

**<<<<>>>>**